**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 44/1998**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **27.01.2026** |
| **பெயர்** | **லலித் ஜி ஜெயின்** |
| **த/பெ** | **கேவர்ஜன்** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.19 p.m**

**8 முதல் 14 –ம் பிரதிவாதிகள் தரப்பில்**
**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

9. இந்த வழக்கில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் வில்லங்கம் போட்டு பார்த்த போது ஆவணம் எண் 1563/1987, 08.06.1987 தேதியிட்ட ஆவணத்தின் மூலமாக 1–ம் பிரதிவாதி, முனுசாமி என்பருக்கு தாவா சொத்தின் ஐட்டம் எண் 2–ல் 1 ஏக்கர் 50 செண்ட் நிலத்தை கிரையம் செய்யததற்கான குறிப்பு காட்டப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அதே தேதியான 08.06.1987 ஆவணம் எண் 1564/1987–ல் 1ம் பிரதிவாதி கிருஷ்ணமூர்த்தி, துலுக்கானம் மற்றும் நடேசன் ஆகியோருக்கு தாவா ஐட்டம் 1 சொத்தில் சர்வே எண் 80/2 – 1 ஏக்கர். தாவா ஐட்டம் 2 சொத்தில் சர்வே எண் 79 ல் 1 ஏக்கரையும் கிரையம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

10. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாவோ அல்லது பின்பாகவோ வில்லங்கம் போட்டுப்பார்த்தேமா என்றால் போட்டுப்பார்த்தோம். அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 07.01.1988 அன்று ஆவணம் எண் 36/1988 ன்படி கிருஷ்ணமூர்த்தி, துலுக்கானம் மற்றும் நடேசன் ஆகியோர்கள் கிரையம் பெற்ற மொத்த விஸ்தீரணத்தில் தாவா ஐட்டம் 1 சொத்தில் 59 செண்ட் நிலத்தையும் தாவா ஐட்டம் 2–ல் 41 செண்ட் நிலத்தையும் 3ம் பிரதிவாதியான வீரையநாயுடுவிற்கு கிரையம்

செய்ததற்கான குறிப்பு வில்லங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வா.சா.ஆ 1 பிறகு சொத்துக்களை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ததாக என் பிராதில் பத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது தவறான சங்கதி என்றால் சரியல்ல. மேற்சொன்ன 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்ததற்கான கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

11. தாவா சொத்து குறித்த வில்லங்கத்தில் 2ம் பிரதிவாதியான காத்தவராயன் எந்த காலத்திலும், எந்த வகையிலும் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் செய்த ஆவணம் எண்கள் 1563/1987 மற்றும் 1564/1987 ஆகிய இரண்டு ஆவணங்கள் குறித்து எங்கள் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்கள் குறித்தும் நாங்கள் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் அந்த இரண்டு ஆவணங்கள் குறித்தும் எங்களுக்கு தெரியாது. மேற்சொன்ன ஆவணங்கள் மூலம் சொத்தினை வாங்கிய நபர்களை இவ்வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி வகையறாக்களிடம் இருந்து 3-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற ஆவணம் எண் 36/1988 குறித்தும் எங்கள் பிராதில் குறிப்பிடவில்லை என்றும் அதற்கு எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் தெரியாது.

12. மேற்சொன்ன தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா சொத்துக்கள் குறித்து கிரையப்பத்திரங்களை ரத்து செய்ய பரிகாரம் கோராமல் தற்போது இந்த வழக்கின் மூலம் விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் பல உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு தற்போது பல்வேறு நபர்களின் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்து குறித்த தற்போது பட்டா 1ம் வாதியின் பெயரிலோ அல்லது அவரின் வாரிசுகளான எங்களின் பெயரிலோ தாக்கல் ஆகி வரவில்லை என்றால் சரியல்ல, என் தந்தையின் பெயரில் தான் பட்டா உள்ளது. எனவே வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

13. வா.சா.ஆ 4 ன் படி வழக்கறிஞர் அறிவிப்பின் படி 1-ம் பிரதிவாதி வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தை மோசடியாக பெறப்பட்டது என்பதால் அதனை ஏற்க மறுத்துவிட்டார் என்றால் சரியல்ல. ஆகவே வா.சா.ஆ 4 ஆவணத்தின் படி அந்த தேதியில் இருந்து 3 வருடங்களுக்குள் விளம்புகை பரிகாரம் கோரி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கு கால வரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 யு.டி.ஆர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா என்றால்

சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தை அடிப்படையாக கொண்டு என் தந்தை பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா வா.சா.ஆ 2 அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் ஸ்வாதீனத்தில் இல்லை என்றும் அதனால் நாங்கள் கூறிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

14. வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் கூட நானோ அல்லது பிற வாதிகளோ வழக்கு சொத்தில் பயிர் செய்து வருவதாக குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. மேலும் அந்த அறிக்கையில் யார் பயிர் செய்து வருகிறார்கள், யார் சுவாதீனத்தில் தாவா சொத்து உள்ளது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. இந்த வழக்கு காலதாமதமாக, முன்னுக்கு பின் முரணாக தாவாவில் விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றும் மற்றும் பிரதிவாதிகளுக்கு சாதகமாக செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.49 பி.எம்.**